# கோடைக்கல்வி முகாம் - 2026

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், கவரை கிராமத்தில் உள்ள பலவை டிரைபல் சொசைட்டி செஞ்சி சார்பில் பழங்குடி இருளர் மாணவ, மாணவிகளுக்கான 13ஆம் ஆண்டு கோடைக்கால கல்வி முகாம் ‘***பலவையில் இணைய, கோடையில் மகிழ***’ என்ற தலைப்பில் நடத்தப்பட்டன. மாணவர்களுக்கு ஏப்ரல் 25ந் தேதி முதல் மே 02ந்தேதி வரையும், மாணவிகளுக்கு மே 02ந்தேதி முதல் மே 09ந்தேதி வரையும் நடைப்பெற்றன. இம்முகாமில் செஞ்சி, மேல்மலையனூர், திண்டிவனம், விக்கிரவாண்டி கீழ்ப்பென்னாத்தூர், மதுராந்தகம் மற்றும் வந்தவாசி ஆகிய வட்டங்களில் உள்ள 40க்கும் மேற்பட்ட பழங்குடி இருளர் வசிக்கும் கிராமங்களிலிருந்து 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துக்கொண்டனர்.

இம்முகாமில் 6 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு முதல் படிக்கும் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இம்முகாமில் மாணவ, மாணவிகளின் கல்வித் திறன் மேம்பட தமிழ், ஆங்கிலம் சரியாக எழுதவும், உச்சரிக்கவும் கற்றுக்கொடுக்கப்பட்டன. மாணவ, மாணவிகளின் சிந்தனைகள் மேலோங்க பொது அறிவு, சமூகத் தலைவர்கள் பற்றிய சிந்தனைகள், இயற்கை பாதுகாப்பு, குழந்தைகள் நல பாதுகாப்பு, சமூக வலைதள விழிப்புணர்வு மற்றும் போதை விழிப்புணர்வு ஆகிய சிறப்பு தலைப்புகளில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. மாணவர்களுக்கான கோடை முகாமின் நிறைவு விழாவில் கவரை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. அய்யனார் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றி பரிசுகள் வழங்கினார். நெகனூர் கிராம நிர்வாக அலுவலர் திரு. S. செல்வம் அவர்கள் மாலை நேரக்கல்வி மைய ஆசிரியருக்கான சிறந்த வழிகாட்டிக்கான விருதினை வழங்கி பாராட்டினார். மாணவிகளுக்கான கோடை முகாமின் நிறைவு விழாவில் செஞ்சி தனி வட்டாச்சியர் திருமதி. M. சாருமதி அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றி பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்வில் விழுப்புரம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு. S. தர்மேந்திரன் அவர்கள் கலந்துகொண்டு குழந்தைகள் கல்வி கற்று சாதிக்க வேண்டுமென்று வலியுறுத்தி பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தினார்.

இம்முகாமில் கற்ற அனைத்தையும் கலை மற்றும் பல்வேறு திறன்கள் வழியாக மாணவ, மாணவிகள் மேடையில் அரங்கேற்றம் செய்தனர். பலவை அமைப்பின் இயக்குநர் அருட்தந்தை ஆரோக்கியசாமி, திட்ட இயக்குநர் அருட்தந்தை ஆனந்த், துணைத் திட்ட இயக்குநர் அருட்சகோதரர் யூஜீன் மற்றும் பணியாளர்கள் இந்நிகழ்வுகளைச் சிறப்புடன் ஒருங்கிணைத்தனர்.